**செய்தி வெளியீடு எண்: 682** **நாள்: 16.11.12**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் 27.11.2012 அன்று நடைபெறவுள்ள திருவண்ணாமலை கார்த்திகை தீப திருவிழாவிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் மற்றும் சுகாதார வசதி உள்ளிட்ட பணிகள் குறித்து இன்று (16.11.2012) தலைமைச் செயலகத்தில் ஆய்வு செய்தார்கள். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. சந்திரகாந்த் காம்ப்ளே, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. டி.பி. இராஜேஷ், இ.ஆ.ப., மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்

******.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**